கவனிக்க.– 13.06.2025 ஆந் திகதிய 2441 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV(அ) (தமிழ் மெழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2442 - 2025 ජූනි මස 20 වැනි සිකුරාදා - 2025.06.20

2442 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 234 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 239 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூன் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 19 வது பிரிவின் (4) வது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வட மத்திய மாகாணத்தில் ஹிங்குராக்கொட பிரதேசச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (பதில்) எச். எம். சீ. ஆர். கே. செனெவிரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1995 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 15 ஆம் திகதி வழங்கப்பட்ட பொ/அளி/ஹிங்கு/1995 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளராகிய சீ. பீ. புர, கிரித்தலை முகவரியில் வசிக்கும் குரும்பலபிட்டிய ஆரச்சிலாகே தோன நந்தாவதி என்பவருக்கு அளிக்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட ப்பதிவாளர் அலுவலகத்தில் இல. 2/1/320 இன் கீழ் 1996.01.16 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.07.11 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தின் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பற்றில்/ கோரலேயில் 54, சீ. பீ. புர கிராம அலுவலர் சீ. பீ. புர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. நி. வரை. 00 ஆம் வரைபடத்தின் இல. 00 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 02 ரூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி மேட்டு நிலம்

மேற்கூறப்பட்ட எல்லைகள்:

வடக்கு : ஏ. பீ. புஞ்சிஹாமியின் காணி;
கிழக்கு : ஓதுக்குக் காடு;
தெற்கு : எச். எம். ஹேரத் பண்டாவின் காணி;
மேற்கு : வீதி ஒதுக்கு காணி.

எச். எம். சீ. ஆர். கே. செனெவிரத்ன,
பிரதேச செயலாளர்,
ஹிங்குரக்கொட.

2024, திசெம்பர் 02.

06 - 121/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 19 வது பிரிவின் (4) வது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் ஹிங்குரக்கொட பிரதேசச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஹிட்டிஹாமு முதியன்சேலாகே சாமினி ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட்ட பொ/அளி/ஹிங்கு/1039

ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளராகிய இல. 18, யட்டியல்பொத்த வடக்கு, கவுடுள்ள எனும் முகவரியில் வசிக்கும் லிந்தமுலகே மெனுவெல் சிங்ஞோ என்பவருக்கு அளிக்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இல. 2/17/113 இன் கீழ் 1996.02.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாசு காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.07.11 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தின் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பற்றில்/ கோரலே 61 யட்டியல்பொதான கிராம அலுவலர் பிரிவில் யட்டியல்பொதான வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 00 இலக்க துண்டு பிரித்தல் வரைபடத்தின் இல. 00 ஆம் இலக்க B.O.P.515 ஆம் இலக்க வரைபடத்தின் 00 இலக்க காணித்துண்டு எனக் காட்டடப்பட்ள்ளதும் 03 ஏக்கர் 00 ரூட்ஸ் 00 பர்சஸ் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச வயற் காணி

மேற்கூறப்பட்ட எல்லைகள்

வடக்கு : 18, 17, 16 ஆம் இலக்க வயற்காணிகள் மற்றும் F. C. 8ஆம் இலக்க வாய்க்கால்;
கிழக்கு : 13 ஆம் இலக்க வயற்காணி;
தெற்கு : 20 ஆம் இலக்க வயற்காணி;
மேற்கு : 23 ஆம் இலக்க வயற்காணி.

எச். எம். சீ. ஆர். குமாரிஹாமி (ப.க.),
பிரதேச செயலாளர்,
ஹிங்குரக்கொட.

06 - 121/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாண ஹிங்குரக்கொடை பிரதேச செயாலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (ப. க.) பிரதி காணி ஆணையாளர் ஹிடிஹாமு முதியன்சேலாகே சாமினி ராஜிதா குமாரிஹாமி செனவிரத்ன ஆகிய நான், காணிக் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1992.11.18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள பொ/ஹிங்கு/45 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான நான், இலக்கம் 471, தம்பலவெவ, ஜயந்திபுர முகவரியில் வசிக்கும் மல்லியாகே ரன்கிரா என்பவருக்கு வழங்கப்பட்டு பொலன்னறுவை மாவட்டப்பதிவாளர் காரியாலயத்தில் 2/1/152 ஆம் இலத்தின் கீழ் 1993.07.01 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் துணை அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு ஒருவரை நியமிப்பதற்கு இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதானால் மேற்கூறப்பட்ட அளிப்புப்பத்திரத்தை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அதுபற்றி 2025.07.11 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தில் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பத்து/ கோரளை 47 சேதியகிரிகம கிராம அலுவலர் பிரிவின் ஜயந்தி கொளனி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ........................ பொறுப்பில் இருக்கும் ..................... ஆம் இலக்கத்தினை உடைய கள பத்திரத்தின்மூலம் தயாரிக்கப்பட்ட இல. F. C. P. D. 47 ஆம் இலக்க துண்டு பிரித்தல் வரைபடத்தில் ............................ என்பவரால் தயாரிக்கப்பட்ட இலக்கம் ரேகை குறிப்பில் இல. 80 காணித்துண்டு என்பதாக காட்டப்பட்டுள்ளதும் 01 ஏக்கர், 00 றூட், 06 பேர்ச் விசாலமானதுமான கீழ்க்காணும் எலலைகளை உடையதுமான அரச காணி : மேடு

வடக்கு : 79;
கிழக்கு : 71;
தெற்கு : 88;
மேற்கு : 10.

எச். எம். சீ. ஆர். கே. செனெவிரத்ன,
பிரதேச செயலாளர்,
ஹிங்குரக்கொட.

2025, சனவரி 22.

06 - 121/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் மெதிரிகிரிய பிரதேசச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் W. M. I. கருனாரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1996.01.18 ஆம் திகதி வழங்கப்பட்ட பொ/அளி/மெதி 444 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளராகிய இல. 114, யாய 08, மஹ அம்பகஸ்வெவ எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே முதியன்சே என்பவருக்கு அளிக்கப்பட்டு பொலன்னறுவை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் இல. 1/4/1/173 இன் கீழ் 1996.05.31 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.07.11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தின் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பற்றில் 103 அம்பகஸ்வெவ கிராம அலுவலர் பிரிவில் கவுடுலுவெவ ii ஆம் கட்டத்தில் யாய - 08 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும். நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. நி. வரை. 11 இ. நி. வரை. 276 ஆம் வரைபடத்தின் இல. 3175 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.384 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே - காட்டப்பட்டுள்ள எல்லைகளைக்கொண்டுள்ளதுமான அரச காணி (மேட்டு நிலம்)

மேற்கூறப்பட்ட எல்லைகள்
வடக்கு : துண்டு இல. 3174;
கிழக்கு : துண்டு இல. 3174;

தெற்கு : துண்டு இல. 3185;
மேற்கு : துண்டு இல. 3190.

டப்ளியூ. எம். இந்திக கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மெதிரகிரிய.

2024, சனவரி 15.

06 - 121/4

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளராகிய எம். டப்ளியூ. கருணாரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் பிரகாரம் அதி மேதகு சனாதிபதி அவர்களினால் 1986.05.09 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள பொ/பிர/8694 என்ற இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான பாழுவத்தே கெதற அப்புஹாமி என்பவருக்கு வழங்கப்பட்டு அது பொலன்னறுவை மாவட்ட பதிவு காரியாலயத்தில் 4/4/282 ஆம் இலக்கத்தின் கீழ் 1988.03.28 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரிமையாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்தாலும் அவர் பின்னுரிமையாளர் ஆவதற்கு விருப்பம் இன்மை காரணமாக பின்னுரிமைக்காரதத்துவத்திற்கு நியமிக்கப்படுவதற்கு எவரும் இல்லை என்று அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் அளிப்புப் பத்திரத்தை மேலே சொல்லப்பட்டுள்ள சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் இதை 2025.07.11 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தில் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த சிங்களபத்து, இல. 68 மெதிரிகிரிய கிராம அலுவலர் பிரிவில் கவுடுளுவெவ திட்டம் I எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு தனது பொறுப்பில் வைத்திருக்கின்ற F. C. P. PL. 81 ஆம் இலக்க வரைபடத்தில் 90 ஆம் இலக்க காணித்துண்டு என்று காட்டப்பட்டுள்ளதும், 01 ஏக்கர் 03 றூட் 30 பேர்ச விசாலமானதும் கொஹொம்பதமான யாய என அழைக்கப்படுகின்ற கீழ்க்காணும் விதத்தில் எல்லைகளை உடைய அரச காணித்துண்டு:

வடக்கு : இலக்கம் 91 மற்றும் 78;
கிழக்கு : இலக்கம் 78 மற்றும் 89;
தெற்கு : இலக்கம் 89 மற்றும் 94;
மேற்கு : இலக்கம் 94 மற்றும் 91.

டப்ளியூ. எம். இந்திக கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மெதிரகிரிய.

2023, ஏப்பிறல் 07.

06 - 121/5

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாண சபை, தமன்கடுவை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் டப்ளியூ. எம். ஐ. கருணாரத்ன ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பொ/பி/8225 ஆம் இலக்க அளிப்புப் பத்திரம் 1986.05.06 ஆம் திகதி நிக்கவெவ எனும் முகவரியில் வசிக்கும் மான்ன தூவகெ ஜேமிஸ் என்பவருக்கு வழங்கப்பட்டு, பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 3/3/263 ஆம் இலக்கத்தின் கீழ் 1989.08.01 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு நியமிப்பதற்கு ஒருவர் இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதானால் மேற்கூறப்பட்ட அளிப்பு பத்திரத்தை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அதுபற்றி 2025.07.11 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தில் தமன்கடுவை பிரதேச செயலாளர் பிரிவின் மெதபத்து/ கோறளை 156 - நிக்கவெவ கிராம அலுவலர் பிரிவில் சந்தணபொகுண எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பெறுப்பில் இருக்கின்ற F. C. P. PL. 43 இலக்க துண்டு பிரித்தல் வரைபடத்தில் .............. ஆல் தயாரிக்கப்பட்ட இலக்கம் ................ ஆம் இலக்க வரைபடத்தில் ................. ஆல் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில். 253 ஆம் இலக்க காணித்துண்டு என்று காட்டப்பட்டுள்ளதும் 03 ஏக்கர், 02 றூட். 12 பேர்ச் விசாலமானதுமான கீழ்க்காணும் எல்லைகளை உடையதுமான அரச காணி :

வடக்கு : காணி துண்டு இல. 244;
கிழக்கு : காணி துண்டு இல. 254;
தெற்கு : காணி துண்டு இல. 133;
மேற்கு : காணி துண்டு இல. 244.

டப்ளியூ. எம். ஐ. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
தமன்கடுவை.

2025, ஏப்பிறல் 07.

06 - 121/6

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) இற்கான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின், புத்தளம் மாவட்டத்தின், வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் எஸ். எம். பி. நந்தசேன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1974.01.24 ஆந் திகதி, ஆர் 10654 எனும் இலக்கத்தையுடைய அளிப்புப் பத்திரம் இல. 484/9, கோட்டே வீதி, பிட்ட கோட்டேயில் வசிக்கும் பிரன்சிள் இஸ்டீவன் பீரிஸ் வெத்தசிங்க அவர்களுக்கு அளித்த, புத்தளம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஆர் 10654 கீழ் 1974.02.12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் வரும் அட்டவணையில் காட்டப்படும் காணிக்கு உரிமை கோரும் பொருட்டு சட்டரீதியான உரித்தாளி எவரும் இல்லாதவிடத்து அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்தும் அவர் உரிமையாளி ஆகுவதற்கு விரும்பாத போது உரிமை கோர எவரும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த அளிப்புப் பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை 2025.07.11 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிர்வாக மாவட்டத்தின் வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவின் பொன்பரப்பிப் பற்று வண்ணாத்திவில்லு வடக்கு கிராம அலுவலர் பிரிவின் வண்ணாத்திவில்லு எனும் பெயரிலான கிராமத்தில் அமைந்துள்ளதும், புத்தளம் நில அளவை அதிகாரியின் கீழுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட இலக்கம் டொ. போ. பீ. பீ. 22 ஐ கொண்ட வரைபடத்தின் இலக்கம் 352 உடைய நிலத் துண்டாக காட்டப்பட்டுள்ளதும் அளவில் 24 ஏக்கர், 03 றூட், 12 பேர்ச் விஸ்தீரணத்தை கொண்டதும் கீழே காட்டப்படும் அடிப்படையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி :

வடக்கு : துண்டு இலக்கம் 333 (மற்றும் பாதைக்கான ஒதுக்கீடு);
கிழக்கு : துண்டு இலக்கம் 353;
தெற்கு : துண்டு இலக்கம் 374;
மேற்கு : துண்டு இலக்கம் 351.

எஸ். எம். பி. நந்தசேன,
பிரதேச செயலாளர்,
வண்ணாத்திவில்லு.

2025, ஏப்பிறல் 21.

06 - 124

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78314.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/04/SLO/LC/PKI/34.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுகுடியிருப்பு பிரதேச செயல க ப் பிரிவின் இலக்கம் (MU/40) ஆனந்தபுரம் கிரா ம அலுவலர் பிரிவில் ஆனந்தபுரம் கிராமத்தில் காணி அலுவ லரால் தயாரிக்கப்பட்ட தோராயமான சுவட்டு வரை ப டம் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 03 ரூட், 25.5 பேர் ச் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வ ர்த்தக நோக்கத்திற்காக திரு. குணரத்தினம் கிறிஸ்டி குனேந்திரன் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வடக்கு: PPS 334 இல் 165 இன் ஒரு பகுதி;
கிழக்கு: PPS 334 இல் 165 இன் ஒரு பகுதி, 174;
தெற்கு: 174, பாதை (பிரதேச சபை);
மேற்கு: PPS 334 இல் 165 இன் ஒரு பகுதி, பாதை (பிரதேச சபை).

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.04.10 முதல் 2055.04.09 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரிக் மதிப்பீட்டின் அடிப்படையில் கன்னிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள், இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.04.10 ஆம் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
''மிஹிகத்த மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 02.

06 - 100

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/54646.
காணி ஆணையாளரின் இலக்கம்: DO 02/MHY/LTL/75.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணி ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

பதுளை மாவட்டத்தில், மஹியங்கனை பிரதேச செயலகப் பிரிவின் வெவ்கம்பஹ - 2 கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடுவிலை கிராமத்தில், நில அளவைப் படம் இல. 57 இன் கீழ் உள்ள துண்டுகள் இல. 5058, 5060, 5061 மற்றும் 5063 ஆகியவற்றுடன் கூடிய ஹெக். 0.2326 அளவிலான அரச காணிப் பகுதி, வர்த்தக நடவடிக்கைகளுக்காக ரவீந்திர அனுர விதானகமகே என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டடுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வடக்கு: ஏ. பி. உக்கு அம்மா மற்றும் ஏ. எச். குமாரிஹாமி ஆகியோரின் காணி;
கிழக்கு: சொரபோர குள வீதி ஒதுக்கீடு;
தெற்கு: அரச காணி;
மேற்கு: சொரபோர குடியேற்றம், கொருப்ப வீதி ஒதுக்கீடு.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். ஆகவே, அரசின் வழமையான ஏனைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியை குத்தகைக்கு வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது ஆண்டுகள் (30) (கௌரவ அமைச்சர் அங்கீகரிக்கும் ஆண்டிலிருந்து எதிர்வரும் 30 ஆண்டுளுக்கு)

வருடாந்த குத்தகை கட்டணம் : கௌரவ அமைச்சர் அங்கீகரிக்கும் ஆண்டு காணியின் மதிப்பீட்டு தொகை ஐந்து மில்லியன் ரூபாயக்கு (ரூ. 5,000,000.00) குறைவாக இருந்தால், பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி காணியின் சந்தை மதிப்பில் 2% அறவிடப்படும். கௌரவ அமைச்சர் அங்கீகரிக்கும் ஆண்டில் காணியின் மதிப்பீட்டு தொகை ஐந்து மில்லியன் ரூபாய்க்கு (ரூ. 5,000,000.00) அதிகமாக இருந்தால், பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி குறித்த ஆண்டு காணியின் சந்தை மதிப்பில் 4% அறவிடப்படும். குறித்த குத்தகை கட்டணம் ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் ஒருமுறை திருத்தப்பட வேண்டும். அத்துடன், முந்தைய 5 ஆண்டுகளின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை கட்டணத்துடன் 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணை கட்டணம்: தவணை கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இக் காணி வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படக்கூடாது;

(இ) இக் குத்தகை ஆரம்பித்த ஒரு வருடத்திற்குள், மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளரின் திருப்திக்கு ஏற்ப காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(ஈ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் பிற நிறுவனங்களால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய சிறப்பு நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்பட்டது;

(உ) நிர்மாணிக்கப்படவுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த அபிவிருத்தி நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் போது, குத்தகைதாரர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் காணியை பெற்றதற்கான நோக்கத்தை நிறைவேற்றத் தவறினால், குத்தகையை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) கௌரவ அமைச்சர் அங்கீகரித்த (2023.08.02) ஆம் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் நிறைவடையும் வரை, இந்தக் காணியை குத்தகைக்கு எடுத்ததன் நோக்கத்தை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் துணை - குத்தகைகள் அல்லது இடமாற்றங்கள் தவிர, வேறு துணை- குத்தகைகள் அல்லது இடமாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகை வாடகை தடையின்றி செலுத்தப்பட வேண்டும். குத்தகை செலுத்தத் தவறினால், ஒப்பந்தம் தானாகவே இரத்து செய்யப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 வாரங்களுக்குள், சம்பந்தப்பட்ட காணியை குத்தகைக்கு வழங்கக்கூடாத ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எழுத்துப்பூர்வமாக எனக்கு சமர்ப்பிக்கப்படாவிட்டால், கோரிக்கைக்கு ஏற்ப குத்தகை வழங்கப்படும்.

எஸ். டி. ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 05.

06 - 106

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/73666.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L-10/LS/TRI/T&G/245.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 228B, சுமேதங்கபுர கிராம அலுவலர் பிரிவின் சுமேதங்கபுர கிராமத்தில் FTP 46 நில அளவை வரைபடத்தில் துண்டு இலக்கம் 111 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 0.20 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட காணித் துண்டை விடுமுறை ஓய்வு விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கான வர்த்தக நடவடிக்கைகளுக்காக GOVERNMENT OFFICERS BENEFIT ASSOCIATION எனும் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு: துண்டு இலக்கம் 112;
கிழக்கு: துண்டு இலக்கம் 112;
தெற்கு: துண்டு இலக்கம் 112 மற்றும் 103;
மேற்கு: துண்டு இலக்கம் 112.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.20 முதல் 2055.05.19 வரை)

வருடாந்த குத்தகைத் தொகை : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை:- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்த கைக்குப் பெற்றுக்கொள்பவர் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்டுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும்பட்சத்தில் குத்தகையை முடிவுற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2025.05.20 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 02.

06 - 120

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78345.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NWP/PLC/L9/AL/LTL/12.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

குருநாகல் மாவட்டத்தின் அலவ்வை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 969 பன்னல கிராம அலுவலர் பிரிவின் உடுமுல்ல கிராமத்தின் இ. கி. ப. 416 நில அளவை வரைபடத்தின் துண்டு இலக்கம் 63 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள ஏக்கர்: 01, ரூட்: 02 பர்ச்சஸ்: 27 பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை மதம் சார்ந்த நடவடிக்கைக்காக உடுமுல்ல சத்திபட்டான தியான வன ஆசிரமத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு: துண்டு இலக்கம்: 61 மற்றும் 62;
கிழக்கு: துண்டு இலக்கம்: 34 E;
தெற்கு: துண்டு இலக்கம்: 34 I மற்றும் 45;
மேற்கு: துண்டு இலக்கம்: 64.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.04.10 முதல் 2055.04.09 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

தவணைத் தொகை:- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை வன ஆசிரமத்தை நடாத்துதல் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) i. குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் ஆசிரமத்தை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்;

ii. குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியிலுள்ள மரம் செடி கொடிகளை முழுமையாகப் பாதுகாத்தல் வேண்டும். எந்த விதமான காரணத்தினாலும் அரசாங்க அதிபரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் இந்த மரம் செடி கொடிகளை வெட்டுதல், அழித்தல் அல்லது சேதத்தை ஏற்படுத்தக் கூடாது;

(உ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை தவிர வேறு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஊ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(எ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஏ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஐ) 2025.04.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்ளவதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஒ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டீ. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 06.

06 - 137

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77967.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L7/LS/BAT/KOP/37.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 204/A, கல்மடு கிராமத்தில், குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 01 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அரசாங்க காணியை சமயம் சார்ந்த நோக்கத்திற்காக Sri Pechchi Amman Temple Trust Board எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டள்ளது.

வடக்கு: Drinage;
கிழக்கு: Drinage;
தெற்கு: State Land;
மேற்கு: State Land.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.04.10 ஆம் திகதி முதல் முன்னோக்கி)

வருடாந்த குத்தகைத் தொகை : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள், குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள், இந்தக் காணியை சமயம் சார்ந்த நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா. எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 11.

06 - 138

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/72073.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: LC/AN/6/GR/09 -35.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

குருநாகல் மாவட்டத்தின் கிரிபாவ பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 17, வீரபொக்குன கிராம அலுவலர் பிரிவின் ராஜாங்கனை இடது கரை யாய 02 கிராமத்தின் TOPO. P. P. 18 வரைபடத்தின் துண்டு இலக்கம் 4772 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 0.102 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நடவடிக்கையொன்றான கூட்டுறவு பிராந்திய விற்பனை நிலையத்தை நடாத்துவதற்காக வரையறுக்கப்பட்ட ராஜாங்கனை கிரிபாவ பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டள்ளது.

வடக்கு: Lot No. 4774;
கிழக்கு: Lot No.4773;
தெற்கு: Lot No. 4774;
மேற்கு: Lot No. 4774.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.04.10 முதல் 2055.04.09 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை:- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை கூட்டுறவு பிராந்திய விற்பனை நிலயத்தை பேணி நடாத்துதல் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடுவுற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.04.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டீ. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 06.

06 - 139